[1990 மார்ச் 30

திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியப் பொதுமக்களுக்குக் குடிமனைப் பட்டா.

*3169—திரு. ஏ. கோதண்டம் ;

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குண்டுபெரும்பேடு, எரையூர், மேட்டுப்பாளையம், பால்நெல்லூர் போன்ற கிராமங்களில் உள்ள பொது மக்களுக்கு குடிமனைப் பட்டா வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை அரசு அறியுமா ?

(ஆ) விரைவில் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பெரும்புதூர் வட்டம், குண்டுபெரும்பேடு, எரையூர், மேட்டுப்பாளையம், பால்நெல்லூர் கிராமங்களில் வீட்டு மனைப்பட்டா கோரி மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

குண்டுபெரும்பேடு கிராமத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட குடிமனைப்பட்டாக்கள் தொலைந்தும், அழிந்தும் போனதால் தற்போது தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தில் பயனடையும் பொருட்டு அனுபவச்சான்று வழங்கினால் போதுமென அக் கிராமத்தினர் தெரிவித்துள்ளனர். அவர்களிடமிருந்து மனுக்கள் உரிய அதிகாரிக்கு வந்தவுடன் அச்சான்று வழங்கப்படும்.

மேட்டுப்பாளையம் கிராமத்தில் அனுபவச்சான்று வழங்கினால் போதுமென கிராமத்தினர் தெரிவித்துள்ளனர். அம் மனுக்கள் வந்தவுடன் இச்சான்று வழங்கப்படும்.

எரையூர் கிராமத்தில் அரிசன நலத்துறை மூலமாகவோ அல்லது ‘ தாட்கோ ’ நிறுவனத்தின் மூலமாகவோ தொகுப்பு வீடுகள் கட்டித் தரும்படி கோரியுள்ளார்கள். பட்டா கோர வில்லை.

பால்நெல்லூர் கிராமத்தைப் பொறுத்தமட்டிலும், பட்டா கோரும் புல எண் 133 தோப்பு புறம்போக்காகும். இதில் பட்டா வழங்குவதற்கு அக்கிராமத்திலேயே ஆட்சேபணை உள்ளது. மேலும் இது தொடர்பாக வழக்கு ஒன்று மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் (ஓ.எஸ். எண். 654/78) நிலுவையில் இருப்பதால் தற்போது நடவடிக்கை மேற்கொள்ள இயலாது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1990 மார்ச் 30]

திரு. ஏ. கோதண்டம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள, குண்டுப் பெரும்பேடு, ஏரையூர், மேட்டுப்பாளையம், பால்நெல்லூர் போன்ற கிராமங்களில் உள்ள பொதுமக்கள், நான் அவர்களைச் சந்திக்கும்போது குடிமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று மனு தந்தார்கள். அதை நான் வட்ட ஆட்சியாளரிடம் தந்து அது காலதாமதம் ஆகிக்கொண்டிருப்பதால் உடனடியாக அவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டதாக நம்புகிறேன். இருந்தாலும் சொல்கிறேன். குண்டுப்பெரும்பேடு, மேட்டுப்பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த பட்டாக்கள் அழிந்தும், தொலைந்தும் போன நிலையில் அவர்களின் வீட்டுமனைக்கு அனுபவச் சான்றிதழ் வழங்கினாலே போதும் என செங்கை-அண்ணா மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் தெரிவித்துள்ளார். உரிய அதிகாரிக்குக் கோரிக்கை வந்தவுடன் அவர்களுக்கு அனுபவச் சான்றிதழ் வழங்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வினா எண் 4250. நேற்றே இந்த வினா வந்து, நேற்றைக்கே விடையும் சொல்லப் பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். இருந்தாலும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விடை சொல்வார்கள். (சிரிப்பு)

கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டத் தீர்வை.

*4250—திரு. துரை ராமசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டத் தீர்வை ரத்து செய்யப்பட வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையை அரசு நிறைவேற்றுமா ?

9-30 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிரமத்திற்கு ஆளாக்கியதற்கு உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு). தண்டத் தீர்வையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஆய்வு செய்து அரசாணை (நிலை) எண் 1955 வருவாய், நாள் 6—11—1989 இல் புஞ்சைக்குப் பதிலாக நஞ்சை விளைவித்து அதனால் விதிக்கப்பட்ட அபராதத் தண்ணீர் தீர்வையில் இதுகாறும் நிலுவையிலே உள்ள தொகை